**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் :OS No: 12/2016 தேதி:09.09.2024**

**வா.சா. 1 – இராதாகிருஷ்ணன்**

**குறுக்கு விசாரணை :** ( 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)

கோபுரம் தாங்கி வீரப்பன் செட்டியார் எனக்கு தாத்தா ஆவார். தாவா சொத்தில் அவருக்கு பாத்தியம் இருந்ததா என்றால் ஆமாம். அவருக்கு பூர்வீக சொத்தாகும். அவர் பெயரில் பட்டா எதுவும் இல்லை. அவர் அனுபவம் செய்து வந்ததற்கு அடங்கல் மற்றும் தீர்வை ரசீது எதுவும் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் கோபுரம் தாங்கி வீரப்பன் செட்டியாரின் வாரிசு என்ற அடிப்படையில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எவ்வளவு பாகம் உள்ளது என்று ஞாபகம் இல்லை. கோபுரம் தாங்கி வீரப்பன் செட்டியாரின் கோபுரம் தாங்கி வீரப்பன் செட்டியாரின் உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை. பிள்ளைகள் இருக்கிறார். வீரப்பத்திரசெட்டியார். வீரலிங்கசெட்டியார். அவருக்கு பெண்பிள்ளைகள் கிடையாது. வீரலிங்க செட்டியாருக்கு வீரைய்யா மட்டும் மகனாவார். மகள்கள் கிடையாது. வீரலிங்க செட்டியார் எப்போது இறந்தார் என்று ஞாபகம் இல்லை. அவரின் இறப்பு மற்றும் வாரிசுசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரலிங்க செட்டியாரின் மகன் வழி பேரன் நான் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு தங்கை மற்றும் தம்பி உள்ளார்கள். தங்கை பெயர் சாந்தி ஆவார். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழிஜாபிதாவில் என் தங்கையை வாரிசாக காட்டவில்லை என்றால் சரியல்ல. காட்டியுள்ளோம். என் அப்பா உடன்பிறந்தவர்கள் இரண்டு பேர்கள். என் அப்பாவின் இறப்பு மற்றும் வாரிசுசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மல்லம்மாள் என்பவர் என் தாயார். கொடிவழிஜாபிதாவில் மல்லம்மாளை உடன்பிறந்தவராக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர் என் தாயார் ஆவார். வீரபத்திரசெட்டியாருக்கு வீரப்பசெட்டியார் என்ற ஒரு மகனாகும். அவருக்கு இறப்பு மற்றும் வாரிசுசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரப்பசெட்டியாருக்கு அண்ணாமலை, ராமசந்திரன், சக்திவேல் என்பவர்கள்

மகன்கள் ஆவார்கள். மகள்கள் உள்ளரா என்று எனக்கு தெரியாது. வீரப்பனின் மனைவி இறந்துபோய்விட்டார். 1ம் பிரதிவாதியின் தாயார் இறந்துபோனார். 3ம் பிரதிவாதியின் தாயார் இறந்துபோனார். நான் பிராதோடு போட்டுள்ள கொடிவழிஜாபிதா முழுமையாக இல்லை என்றால் சரியல்ல. நான் முதலில் பிராது போடும்போது தாவா சொத்து என் முன்னோர்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று தாக்கல் செய்திருந்தேன். பின்னால் வீரப்பத்திரசெட்டியார், வீரலிங்கசெட்டியார், சங்கரலிங்க செட்டியார் ஆகிய மூவரும் சேர்ந்து 1905 ஆண்டில் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படியார்களில் சங்கரலிங்கசெட்டியார் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி மூவரும் சேர்ந்து கிரையம் வாங்கியதால் மூவருக்கும் சமபாத்தியம் உள்ளது என்றால் சரிதான். சங்கரலிங்கசெட்டியாரின் இறப்பு மற்றும் வாரிசுசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சங்கரலிங்கசெட்டியாரின் வாரிசுகளை சேர்க்காத காரணத்தினால் வழக்கில் தேவையான தரப்பினர்களை சேர்க்காத தோஷம் உள்ளது என்றால் சரியல்ல. சங்கரலிங்கசெட்டியார் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 5 ஆவணம் ஜெராக்ஸ் ஆவணம் என்றால் பதிவு அலுவலகத்தில் எடுத்தது. அதன் அசல் நீதிமன்றத்தில் உள்ளது. அசல் ஆவணம் யார் கையில் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் என்ன சொத்து விவரம் உள்ளது என்றால் காசிநாதர்ஐயர் புஞ்சைக்கு மேற்கு, குருசாமி புஞ்சைக்கு தெற்கு, திருச்சுழி பாதைக்கு வடக்கு, தேவாங்கர் தெப்பகுளத்திற்கும் கிழக்கு சுமார் 1 ஏக்கர் உள்ளது. பைமாஸ் எண்.682 ஆகும். பைமாஸ் எண்ணுக்கும் தற்போது உள்ள சர்வே எண்ணுக்கும் தொடர்புள்ள ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேன். பைமாஸ் எண் தமிழ் எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் மூலம் தாவா சொத்தில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தேவாங்கர் தளைமனைஅம்பலம் உறவினர்முறையில் எம்.டி. இராமசாமி என்பவரின் சமாதி உள்ளது. அவர் இறந்து எத்தனை ஆண்டுகளாகிறது என்று எனக்கு தெரியாது. இறந்தவரின் சமாதியில் உள்ள கல்வெட்டில் இறந்த ஆண்டு உள்ளது என்றால் இருக்கலாம். என் பிராதிலும் சொத்துவிவரத்திலும் எம்.டி இராமசாமி என்பரின் சமாதி உள்ளது என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். ஏன் சொல்லவில்லை என்றால்

பங்காளி சொத்து என்பதால் அவர் பங்கில் வைத்து கொள்வார் என்று உறவின்முறையில் கேட்டதால் சொல்லவில்லை. நாங்கள் மறுத்தபோதும் அவர்கள் வைத்து கொண்டார்கள். தாவா சொத்தின் எந்த பக்கத்தில் சமாதி கட்டப்பட்டுள்ளது என்றால் கிழக்கு பகுதியில் கட்டப்பட்டுள்ளது. பங்காளி என்பவர்கள் யார் என்றால் வீரபத்திரசெட்டியார் வகையறா ஆகும். அவர்கள் பாகத்தில் சமாதி வைத்துள்ளார்களா என்றால் ஆமாம். தாவா சொத்தில் ஒரு மடம் உள்ளதா என்றால் உள்ளது. அது வீரபத்திரசெட்டியார், வீரலிங்கசெட்டியார் ஆகியோர் கட்டியது. தோராயமாக 1905–1920 க்குள் கட்டியிருக்கலாம். தாவா சொத்தில் கிணறு முன்பு இருந்தது. இப்போது தூர்ந்துவிட்டது. அந்த கிணறு காலபோக்கில் அதுவாகவே மூடிவிட்டது. அந்த கிணறு உள்ள இடத்தில் தளைமனைஅம்பலம்உறவின்முறை எந்த கட்டிடம் கட்டவில்லை. மடத்திற்கு கதவு எண் இருக்கும். மின்இணைப்பு உள்ளது. 2016 ஆண்டு ஜனவரி மாதம் 4 முதல் 6 பிரதிவாதிகள் வேப்பமரத்தை வெட்டிவிட்டார்கள். தாவா சொத்தில் உள்ள மடத்திற்கு வீட்டுவரி 4 முதல் 6 பிரதிவாதிகள் செலுத்தி வீட்டுவரி ரசீது பெற்றுவருகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் உள்ள மடத்திற்கு மின்கட்டணம் 4 முதல் 6 பிரதிவாதிகள் செலுத்தி ரசீது பெற்று வருகிறார்கள் என்றால் தெரியவில்லை. நானோ, என் பங்காளிகளோ தாவா மடத்திற்கு வீட்டுவரி செலுத்தினோமா என்றால் என் தாத்தா செலுத்தினார் நாங்கள் செலுத்தவில்லை. வீரலிங்கசெட்டியார் மகன் வீரய்யாசெட்டியார் வரி செலுத்தினார். மின்கட்டணம் எந்த காலத்திலும் நாங்கள் செலுத்தவில்லை. தாவா சொத்தில் மடத்திற்கு கிழமேல் 25 அடி, தென்வடல் 25 அடியும் உள்ளது. செங்கல் சுவரால் கட்டப்பட்டது. மடத்தின் மதிப்பு ரூ.50,000–ரூ60,000/– பெறும். கட்டிடம் இடிந்தநிலையில் உள்ளது. எப்போழுது வேண்டுமானாலும் இடிந்துவிழும் நிலையில் இருக்கிறதா என்றால் இருக்கலாம். என் பிராதில் மடத்திற்கு மதிப்பு போடவில்லை என்றால் இடிந்தநிலையில் உள்ளதால் போடவில்லை. மடம் இடிந்தநிலையில் உள்ளது என்று என் பிராதில் சொல்லவில்லை. பிராது போடும் போது கட்டிடம் நல்லநிலையில் இருந்தது. தற்போது இடிந்தநிலையில் உள்ளது. வா.சா.ஆ 4 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. மூவரும் சேர்ந்து டிரஸ்டுக்கு எழுதி கொடுத்தது. வீரபத்திரசெட்டியாரர், வீரலிங்கசெட்டியார்,

சங்கரலிங்கசெட்டியார் ஆகிய மூவரும் சேர்ந்து டிரஸ்டுக்கு எழுதி கொடுத்து. மேற்படி மூவரும் சேர்ந்து அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம், சுந்தர விநாயகர்கோவில் மடம், தர்மகிணறு நந்தவனத்திற்காக எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆவணத்தில் விநாயகர் கோவில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் சுந்தரவிநாயகர்கோவில் மடம் என்று சொல்லப்பட்டுள்ளதால் கோவில் இல்லாமல் மடம் இருக்காது. குறிப்பிட்டு விநாயகர் கோவில் என்று சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் சொத்துவிவரத்தில் தாவா சொத்தில் விநாயகர்கோவில் கட்டப்பட்டதாக பிராது பாரா 10 அ – வில் சொல்லப்பட்டுள்ளது. சொத்துவிவரத்தில் விநாயகர் கோவில் உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்தவித விநாயகர் கோவிலும் இல்லை என்றால் சரியல்ல. விநாயகர் கோவிலை 4 முதல் 6 பிரதிவாதிகள் அப்புறப்படுத்திவிட்டார்கள். எந்த வருடம் அப்புறப்படுத்தினார்கள் என்று ஞாபகம் இல்லை. நான் பிராதில் 4 முதல் 6 பிரதிவாதிகள் அப்புறப்படுத்திவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் பிராது போட்ட காலத்தில் இல்லை என்பதால் நான் சொல்லவில்லை. பிராதை சீர்திருத்தம் செய்யும்போது தாவா சொத்தில் விநாயகர் கோவிலை 4 முதல் 6 பிரதிவாதிகள் அப்புறப்படுத்தினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து என்பது எங்கள் சொத்து என்று பாகத்திற்கு என்று போட்டேன். பின்பு பிரதிவாதிகள் தாக்கல் செய்த ஆவணத்தின்படி டிரஸ்டு சொத்து என்று தெரிந்து கொண்டு வழக்கை சீர்திருத்தம் செய்துள்ளேன். இவ்வழக்கில் நான் கோரியுள்ள பாகபரிகாரம் தேவையில்லை என்றால் டிரஸ்டு சொத்து இல்லை என்றால் பாகபிரிவினை உண்டு. நானோ, என் பங்காளிகளோ வழக்கு போடுவதற்கு முன்பு வரை தர்மத்தை நடத்திவந்தோம். வழிபோக்கர்களுக்கு தண்ணீர், சொக்கலிங்க தேர்திருவிழா நடக்கும்போது சாமியார்களுக்கு அன்னதானம் செய்வோம். இந்த வழக்கு தாக்கல் செய்தபின்னரும் நாங்கள் எங்கள் வீட்டில் அந்த தர்மத்தை செய்துவருகிறோம். 4 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தில் விடமாட்டேன் என்று கூறுகிறார்கள். தாவா சொத்து என்பது 4 முதல 6 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை காலியிடமாக உள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதிகள் செங்கல் காளவாசலுக்கு வாடகைக்கு விட்டுஇருந்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள மடம்

சும்மா தான் உள்ளது. வழக்கிற்கு பின்பு 4 முதல் 6 பிரதிவாதிகள் மடத்தை பட்டறைக்கு வாடகைக்கு விட்டிருந்தார்கள். எந்த வருடங்களாக வாடகைக்கு விட்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கிற்கு பிறகு செட்டு போட்டுள்ளார்கள். வாடகை யார் வாங்குகிறார்கள் என்று எனக்கு தெரியாது. வாடகைதாரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் வழக்கிற்கு பின் போட்டதால் சேர்க்கவில்லை. நான் எத்தனை வருடம் வழக்கறிஞர் குமாஸ்தாவாக வேலை செய்தேன் என்று ஞாபகம் இல்லை.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.